புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | மார்ச் 14, 2019 | புரட்சி 18 | முழக்கம் 09 | விலை: ரூ.3.00

# தலைநகரில் தொடங்கி வைத்தது திராவிடர் விடுதலைக் கழகம்

# மணியம்மையார் நூற்றாண்டு விழா; மேடையில் ஜாதி மறுப்புத் திருமணம்




அன்னை மணியம்மையார் நூற்றாண்டு 2019 மார்ச் 10இல் தொடங்குகிறது. மார்ச் 9ஆம் தேதியன்றே சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாட்டில் அன்னையின் நூற்றாண்டு விழாவை முதன்முதலாக தொடங்கி வைத்துள்ளது. வடசென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் அன்னை மணியம்மையார் நூற்றாண்டு மற்றும் மகளிர் தின விழா, பெரம்பூர் பாரதி சாலையில் எழுச்சியுடன் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் இராஜி தலைமை தாங்கினார். இரண்யா வரவேற்புரையாற்றினார். தோழர்கள் தேவி, ஜெயஸ்ரீ, வெண்ணிலா, சங்கவி முன்னிலை வகித்தனர். ‘விரட்டு’ கலைக் குழுவினரின் பறை இசை, நாடகம், கலை நிகழ்வுகளோடு நிகழ்ச்சிகள் நடந்தன. தமிழ்நாடு அறிவியல் மன்ற ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, மணிமேகலை, புதிய குரல் நிறுவனர் ஓவியா, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர்.

அன்னை மணியம்மையாரின் தியாக வாழ்வு, எளிமை, பெரியாரை 95 ஆண்டுகள் வரை அவர் உடல்நலன் பேணிக் காத்த அர்ப்பணிப்பு, இராவண லீலா நடத்திய தீரம் குறித்து விரட்டுக் குழு பாடகர் சித்திரை சேனல் பாடிய எழுச்சிப் பாடல் அனைவரையும் கவர்ந்தது. ஆசிரியர் சிவகாமி தனது உரையில், சுயமரியாதை இயக்கத்தில் பங்கேற்ற பெண்கள், பெண்ணுரிமை மட்டும் பேசவில்லை; பார்ப்பன எதிர்ப்பு - சமூக நீதி - பகுத்தறிவுக் கொள்கைகளையும் பேசியதை பெருமை யுடன் நினைவு கூர்ந்தார். மணிமேகலை தனது உரையில், பெரியார் தொண்டின் காரணமாகவே நாங்கள் இந்த மேடையில் நிற்கிறோம் என்று குறிப்பிட்டார். மகளிர் நாள் - உழைக்கும் மக்களுக்காக உருவாக்கப்பட்ட நாள். ஆனால், இன்று வர்த்தக நிறுவனங்கள், தங்கள் வணிகத்தை விரிவாக்கும் நோக்கத்தோடு நுகர்வோர் கலாச்சார நாளாக மாற்றி வரும் அவலத்தை சுட்டிக் காட்டினார்.

ஓவியா தனது உரையில், மணியம்மையார் பெரியார் திருமண ஏற்பாட்டைக் கொச்சைப் படுத்துவோருக்கு பதிலளித்தார். 31 வயது பெண் 70 வயதுடைய ஒரு சமுதாயப் புரட்சித் தலைவரின் வாழ்க்கைக்குள் விரும்பி நுழைந்தது, கணவன்-மனைவி வாழ்க்கை வாழ்வதற்கு அல்ல; பெரியார் தனக்குப் பிறகு தனது சொத்துகள் - இயக்கம் - சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும்; சுயநலமிகள் கைகளுக்குள் போய்விடக் கூடாது என்ற கவலையோடு நம்பிக்கைக்குரிய சட்டபூர்வ வாரிசு ஒருவரைத் தேடிய சூழலில் அந்த இடத்துக்கு அன்னை மணியம்மையார் வந்து சேர்ந்தார். பெண்ணை வாரிசாக தத்து எடுப்பதற்கு அன்றைக்கு இந்து சட்டத்தில் இடமில்லாத நிலையில் மனைவியாக சட்டப்படி பதிவு செய்வதன் வழியாகவே வாரிசாக்க முடியும் என்பதால் திருமணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டார்கள். இருவரும் சேர்ந்து எடுத்த அந்த முடிவு அது; திருமணம் அல்ல; திருமணம் என்ற ஏற்பாடு. பெரியார் தன் மீது கொண்டிருந்த நம்பிக்கைக்கேற்ப அன்னை மணியம்மையார் வாழ்ந்து காட்டினார். பெரியார் மணியம்மையாருக்கு தனிப்பட்ட முறையில் எழுதி வைத்த சொத்துக்களையும் அரசுக்கும் அறக்கட்டளைக்கும்தான் வழங்கினார். தன்னுடைய உறவினர்களுக்கு வழங்கவில்லை. பெரியார் மறைவுக்குப் பிறகு இயக்கத்துக்குத் தலைமையேற்று இயக்கத்தை வழி நடத்தி 58ஆவது வயதிலேயே முடிவெய்தினார் என்று விரிவாக விளக்கினார்.

விடுதலை இராசேந்திரன் தனது சுருக்கமான உரையில், அன்னையார் கழகத் தலைமையேற்று வழி நடத்திய காலங்களில் பெரியார் திடலிலேயே தங்கி பணியாற்றி அம்மாவுடன் நேரடியாகப் பழகியதை நெகிழ்வோடு நினைவு கூர்ந்தார். கடும் அடக்குமுறை ஏவி விடப்பட்ட அவசர நிலை காலத்தை அவர் துணிவுடன் எதிர் கொண்டதை சுட்டிக் காட்டினார்.

கொளத்தூர் மணி தனது உரையில் பெரியார்

4ஆம் பக்கம்

## ஈரோடு சித்தோட்டில் தடையைத் தகர்த்து கழகம் நடத்திய மகளிர் நாள் கூட்டம்

திவிக ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக 08.03.2019 வெள்ளியன்று, சித்தோடு பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் நடக்கவிருப்பதாக இருந்த உலக மகளிர் தின விழா நிகழ்விற்கு காவல்துறை அனுமதி மறுத்தது. மறுப்பதற்கு அவர்கள் தரப்பு சொல்லியக் காரணங்கள் தர்க்கமற்றவை. உள்நோக்கம் கொண்டவை. இனியும் அவர்களிடம் சுமுகப் போக்குடன் பயணிப்பதென்பது சுயமரியாதையை அடகு வைப்பதற்குச் சமமென உணர்ந்து, தோழர்கள் களமிறங்கினர். மாநிலப் பொறுப்பாளர்களான ப. இரத்தினசாமி, திருப்பூர் துரைசாமி, சூலூர் பன்னிர்செல்வம், மடத்துக்குளம் மோகன் ஆகியோரும் மாவட்டப் பொறுப்பாளர்களான எழிலன், வேணுகோபால், சண்முகப்பிரியன், கிருஷ்ணமூர்த்தி, மரவபாளையம் குமார் ஆகியோரும் மணிமேகலை, ராசிபுரம் சுமதி, ஜோதி, மலர், கவிப்பிரியா, சித்ரா, மகேஷ்வரி, கமலா, சத்யராஜ், சௌந்தர், இந்தியப்பிரியன், ரமேஷ், ரவி, செந்தில் எனப் பெருந்திரளோடு சித்தோடு பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் கூடினார்கள். அதன்பின் அங்கே வந்த காவல்துறையினர் அனுமதி மறுக்கப்பட்டக் கூட்டத்தை எதற்காக நடத்துகிறீர்கள்? சட்டத்தை மீறுகிற செயல் என மிரட்டுகிறத் தொனியில் கூற தோழர் ரத்தினசாமி காவல்துறையின் உள்நோக்கத்தையும் , சமீபகாலமாக அவர்கள் கழக நிகழ்வுகளை முடக்கும் வகையில் செயல்படுவதையும், அதற்குப் பின்னனியிலுள்ள அரசியலையும் காத்திரத்தோடும், கடுமையோடும் சுட்டிக்காட்டி ..நிகழ்ச்சி நடந்தே தீரும். கைது செய்தாலும் பயப்பட மாட்டோம் என அறிவித்து,ஓர் எழுச்சிகரமான துவக்க உரையுடன் நிகழ்ச்சியைத் தொடங்கினார். தொடர்ச்சியாக தோழர்களும் உரையாற்றினர்.

கூடிய மக்கள் கூட்டத்தை காவல்துறையினர் விரட்டியபடியே இருந்தமையால் மக்கள் தத்தம் வீடுகளின் முகப்பில் நின்றபடியே தோழர்கள் ஆற்றிய உரையைக் கேட்டவாறு நின்றிருந்தனர். ஒலிபெருக்கியும், மின்விளக்கும் இல்லாது நடந்தக் கூட்டமெனினும் காவல்துறையின் அடக்குமுறையைத் தகர்த்தெறிந்தக் கூட்டம் என்கிற பெருமிதம் ஒவ்வொருத் தோழர்களின் நெஞ்சிலும் நிரம்பியிருந்தது. தோழர்களுக்கு அப்பகுதியில் வசிக்கும் நீலாமணி என்பவர் தேநீர் வழங்கி உபசரித்தார். எதைச் சொன்னாலும் தலையாட்டிச் செல்லுகிறக் கூட்டமல்ல பெரியாரின் வாரிசுகள். தடைகள் ஒன்றே தடையில்லாது அவர்களை இயங்க வைக்கும் சூட்சமம் என அரசு எந்திரத்திற்கு உணர்த்திய நிகழ்வு இக்கூட்டம்!

# தமிழ்நாட்டுப் பணிகளை வடநாட்டார் பறிப்பதை இனியும் பொறுக்க முடியுமா?

தமிழ்நாட்டு வேலை வாய்ப்புகளை வடநாட்டுக்காரர்களுக்கு வாரி கொடுத்ததை மறக்க முடியுமா?

- 2013 முதல் 2016 வரை மத்திய அரசு தேர்வாணையத்தில் உருவாக்கப் பட்ட பணியிடங்களில் தமிழ்நாட்டில் பணிகளில் அமர்த்தப்பட்ட வடநாட்டுக்காரர்கள் எவ்வளவு பேர் தெரியுமா? 1988 பேர் தமிழர் களுக்குக் கிடைத்தது 110 பணிகள் மட்டுமே. (6 சதவீதம்)
- பீகார் - இராஜஸ்தான் மாநிலங்களின் பயிற்சி நிறுவனங்கள் தேர்வாணையத்திடம் ‘கள்ளக் கூட்டு’ வைத்து தமிழ்நாட்டுக்குள் முறைகேடாக வடநாட்டுக்காரர்களை வேலைகளில் திணித்ததை மறக்க முடியுமா? - இப்படி முறைகேடாக சென்னை வருமான வரித் துறையில் வேலைக்கு வந்த 3 வடநாட்டுக்காரர்கள் கண்டறியப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டனர்.
- 2014ஆம் ஆண்டு மத்திய தேர்வாணையம் நடத்திய தேர்வுகளில் வட மாநிலத்துக்காரர்கள் இலஞ்சம் கொடுத்து தேர்வில் பெற்றி பெற்றது கண்டறியப்பட்டு, பிறகு தேர்வே இரத்து செய்யப்பட்டது.
- அஞ்சல் துறையையும் விட்டு வைக்கவில்லை. கடைநிலை ஊழியர் களுக்கான தேர்வுகளை அந்தந்த மாநில அரசுகளே நடத்தி மாநில மக்களுக்கு வேலை வழங்கி வந்தன. அதையும் அகில இந்திய தேர்வாக மாற்றியது மோடி ஆட்சி. அதனால் தமிழக அஞ்சலகத் துறையில் வடநாட்டுக்காரர்கள் குவிந்தார்கள். தமிழே தெரியாத வடநாட்டுக்காரர்கள் கடுமையான தமிழ்மொழிக்கான தேர்வில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களைவிட கூடுதல் மதிப்பெண் பெற்றார்கள். பிறகு நடந்த மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டன. பிறகு அந்தத் தேர்வும் இரத்து செய்யப்பட்டது.
- தமிழ்நாட்டில் தேசியமய வங்கிப் பணியாளர்களுக்கான தேர்வுகளில் தமிழ்மொழி தெரிந்தவர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட வேண்டும் என்ற விதி இருந்தது. இந்த விதியை மாற்றியது மோடி ஆட்சி. கடந்த ஆண்டு ‘ஸ்டேட் பேங்க்’ பணியாளர் தேர்வில் ஆங்கில மொழி மட்டுமே அடிப்படைத் தகுதியாக்கினார்கள். அதன் விளைவு ஸ்டேட் வங்கியில் தமிழர் வேலை வாய்ப்புகளை வடநாட்டுக்காரர்கள் பறித்துக் கொண்டு விட்டார்கள். இந்த ‘பறிப்பு’களைத் தட்டிக் கேட்க வேண்டிய அ.இ.அ.திமு.க. ஆட்சி கேட்டதா? இல்லை; அது மட்டுமல்ல; ‘குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியையும் பறித்தது’ என்ற கதைபோல் தமிழக அரசு நடத்தும் தேர்வுகளிலும் வடநாட்டார்கள் குவிந்து வருகிறார்கள். அதிர்ச்சியடையாதீர்கள்!
- தமிழ்நாட்டிலுள்ள ‘பாலிடெக்னிக்குகளில்’ 1058 விரிவுரை யாளர்கள் பணியிடங்களுக்கு 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் தேர்வுகளை நடத்தியது. தேர்வு முடிவுகள் 7.11.2017 அன்று இணையத்தில் வெளியிடப்பட்டன. பெயர்ப் பட்டியலைப் பார்த்தபோது கடும் அதிர்ச்சி. குப்தா, ரெட்டி, சர்மா, நாயர், பாண்டே, சிங் என்ற ஜாதி ‘வால்’களைக் கொண்ட பிற மாநிலத்தவர்களே அதிகம் தேர்வு பெற்றிருந்தனர். அதுமட்டுமா, ‘மெக்கானிக்கல் என்ஜினியரிங்’ துறையில் தேர்வு செய்யப்பட்ட 219 விரிவுரை யாளர்களில் பொதுப் போட்டிக்கான 67 இடங்களில் 46 பேர் வடநாட்டுக்காரர்கள் - வெளி மாநிலத்தவர்.
- ‘ஈசிஈ’ என்ற மின்னணு தொடர்பியல் துறையில் பொதுப் போட்டி யில் தேர்வு செய்யப்பட்ட 36 விரிவுரையாளர்களில் 31 பேர் வடநாட்டுக் காரர்கள்.
- தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பணிகளில் மட்டுமல்ல; மாநில அரசுப் பணிகளிலும் வடநாட்டுக்காரர்கள் குவிகிறார்கள்.
- தமிழ்நாட்டு தொடர்வண்டித் துறைகளில் - அஞ்சலகங்களில் - வருமான வரித் துறையில் - சுங்கத் துறையில் - ஏன், தமிழக அரசுப் பணிகளிலும் வடநாட்டார்களைக் குவித்து வரும் மோடி ஆட்சியும் வாழப்பாடி ஆட்சியும் மீண்டும் தங்களை ஆட்சியில் அமர்த்த வாக்கு கேட்டு வருகிறார்கள்.

தமிழர்களே, என்ன செய்யப் போகிறீர்கள்?

# மிரட்டிய ஆளுநர்கள்: மண்டியிட்ட ஆட்சியாளர்கள்!

பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்யாத மாநிலங்களில் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்களை ஆளுநர்களாக்கி ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்தவர்கள்தான் இப்போது வாக்கு கேட்டு வருகிறார்கள்.

- அரசின் திட்டப் பணிகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் மாவட்டந்தோறும் சுற்றுப் பயணம் செய்தார். அதிகாரிகளை நேரடியாக அழைத்துப் பேசி ஆணைகளைப் பிறப்பித்தார். ஆளுநரின் இந்த அத்துமீறலை எடப்பாடியார் ஆட்சி எதிர்க்க வில்லை. கைகட்டி வாய் பொத்தி வேடிக்கைப் பார்த்தது. எதிர்க்கட்சியான தி.மு.க. தான் ஆளுநரின் இந்த அத்துமீறலை எதிர்த்து அவர் சென்ற இடமெல்லாம் கருப்புக் கொடி போராட்டங்களை நடத்தியது.
- ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி தேர்வு செய்த முதலமைச்சர் சசிகலாவை பதவிப் பிரமாணம் செய்து வைக்க மறுத்து இழுத்தடித்தார் தமிழக கவர்னர், வித்யாசாகர் ராவ்.
- தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களை தேர்வு செய்ய குழு அமைத்து குழுவின் பரிந்துரைப்படி துணை வேந்தர் களை தேர்வு செய்யும் உரிமை தமிழக அரசிடமே இருந்தது; அந்த உரிமையை இன்றைய தமிழக ஆளுநர் பறித்துக் கொண்டு விட்டார்.
- அம்பேத்கர் பெயரில் செயல்படும் சட்டப் பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தர் சூர்ய நாராயண சாஸ்திரி என்ற ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர், அண்ணா பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தர் - கர்நாடகத்தைச் சேர்ந்த சூரப்பா. தமிழ்நாடு கலை மற்றும் நுண் பல்கலைக்கழத்துக்கு துணைவேந்தர் கேரளாவைச் சார்ந்த பரிமளா தேவி; அத்தனையும் ஆளுநரின் நியமனங்கள். தமிழக அரசு இதை எதிர்த்து வாயைத் திறக்கவில்லை.
- மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள 16 பல்கலைக் கழகங்களில் மத்திய மனித வளத்துறை துணை வேந்தர்களை நியமித் துள்ளது. இவற்றில் ஒரு பதவி கூட தமிழருக்கு வழங்கப்படவில்லை.
- திருவாரூரில் தொடங்கப்பட்ட மத்திய பல்கலைக்கழகத்தில் ஒரிசாவைச் சார்ந்த ஆதித்ய பிரசன்னராவ் துணைவேந்தராக்கப் பட்டார். அவருக்குப் பிறகு இப்போது கருநாடகத்தைச் சார்ந்த பி.பி. சஞ்சய் துணைவேந்தராக வந்துள்ளார். தமிழ்நாட்டுப் பல்கலையில் தமிழர்களையே நியமிப்பது நல்லது என்று தேர்வுக் குழு பரிந்துரை செய்தும் அதை குப்பைக் கூடையில் வீசி விட்டார்கள்.
- நக்கீரன் கோபால், ‘நக்கீரன்’ இதழில் தமிழக ஆளுநர் குறித்த ஒரு கட்டுரை வெளியிட்டார். அதற்காக காவல் துறையில் ஆளுநரே நேரடியாக புகார் தந்து இந்திய தண்டனைச் சட்டம் 124ஆவது பிரிவின் கீழ் 7 ஆண்டுகள் பிணையில் வெளிவராத ஒரு சட்டத்தைப் பயன்படுத்தி கைது செய்ய ஆளுநரே உத்தரவிட்டார். அரசு நிர்வாகத்தில் இப்படி நேரடியாக தலையிடலாமா என அ.இ.அ.தி.மு.க. ஆட்சி கேட்கவில்லை. ஆனால் எழும்பூர் ‘மாஜிஸ்ரேட்’ இந்த வழக்கிற்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்று கூறி நக்கீரன் கோபாலை ‘ரிமாண்ட்’ செய் மறுத்தார். மாநில ஆட்சி யின் நிர்வாகத்தில் ஆளுநர் மேற்கொண்ட அப்பட்டமான தலையீடு இது.
- 7 தமிழர் விடுதலைக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள 161ஆவது பிரிவின் கீழ் தமிழக அமைச்சரவை ஒப்புதல் தந்த பிறகும் கையெழுத்திட வேண்டிய ஆளுநர் பல மாதங்களாக கோப்பை கிடப்பில் போட்டு அமைச்சரவை முடிவை அவமதித்து வருகிறார். ஆளுநர் ஏன் தாமதிக்க வேண்டும் என்று கேட்க இந்த ஆட்சி தயாராக இல்லை.

ஆளுநர்களைக் கொண்டு ஆட்சி நடத்தும் பா.ஜ.க.வும் மாநில உரிமைகளில் ஆளுநரின் தலையீடுகளைத் தட்டிக் கேட்க நடுங்கி நிற்கும். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியும் இப்போது கரம் கோர்த்துக் கொண்டு தமிழர்களின் உரிமைகளை மீண்டும் ‘காவு’ கேட்க தேர்தல் களத்தில் நிற்கின்றன.

தமிழர்களே, என்ன செய்யப் போகிறீர்கள்?




## வரலாற்றில் பார்ப்பனிய வன்முறைகள்: சென்னையில் கழகம் நடத்திய கருத்தரங்கு

காந்தியார் நினைவுநாளையொட்டி வரலாற்றில் ‘பார்ப்பனிய வன்முறைகள்’ எனும் தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சென்னை நிருபர்கள் சங்க அரங்கத்தில் **24.2.2019** அன்று மாலை **5** மணியளவில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி தலைமை தாங்கினார். கார்த்தி இராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். ‘இந்து இராஷ்டிரத்தின் இரத்த சாட்சிகள்: தபோல்கரி லிருந்து கவுரி லங்கேஷ்வர் வரை என்ற தலைப்பில் தோழர் துரை உரையாற்றினார்.

கோல்வாக்கர் கூறிய ‘இந்து இராஷ்டிரம்’ குறித்தும் பஞ்ரஜ்க்தள் ஆர்.எஸ்.எஸ். போன்ற ‘சங்பரிவார்’ அமைப்புகள் இரகசிய செயல் திட்டங்கள், தபோல்கர், பன்சாரே, கல்புர்கி, கவுரி லங்கேஷ் படுகொலைக்குப் பின்னால் உள்ள மதவெறி அமைப்புகள் குறித்தும் விளக்கிப் பேசினார். ‘இராமன் அயோத்தியில் பிறந்தானா ? வரலாறும் கற்பிதங்களும்’ என்ற தலைப்பில் உரையாற்றிய மா.கி.எ. பிரபாகரன், இராமாயணத்தில் கூறப்படும் அயோத்தியே இப்போதுள்ள அயோத்தி இலலை என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கினார். வால்மீகி இராமாயணம் மட்டுமல்லாது, பல்வேறு இராமாயணங்கள் இருப்பதையும் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு இராமயணக் கதைகள் கூறப்படுவதையும் புராணங்களை வரலாறுகளாக்கும் மோசடிகளையும் விளக்கிப் பேசினார். தொடர்ந்து விடுதலை இராசேந்திரன், ‘‘புத்தம்-சமணத்தை வீழ்த்திய பார்ப்பன வன்முறை’’ என்ற தலைப்பில் உரையாற்றினார். நிறைவாக கொளத்தூர் மணி, ‘‘காந்தியார் கொலையின் பின்னணி’’ என்ற தலைப்பில் பேசுகையில், காந்தியார் உயிரைக் காப்பாற்றுவதில் அன்றைய காங்கிரஸ் ஆட்சியும் பட்டேலும் காட்டிய அலட்சியம், பட்டேலின் காந்தி எதிர்ப்பு ஆகியவற்றை சுட்டிக் காட்டிப் பேசினார். மயிலாப்பூர் மனோகர் நன்றி கூறினார்.

# அரசை மிரள வைத்த தேசியக் கொடி எரிப்பு அறிவிப்பு

*22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையின் விரிவாக்கம்.*

1955 ஜூலை 17இல் திருச்சியில் நடந்த திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்தும், இந்தியக் கூட்டாட்சிக்குள் தமிழர்கள் இருக்க விரும்பவில்லை என்பதை உணர்த்தவும், 1955 ஆகஸ்டு 1இல் நாடெங்கிலும் இந்தியத் தேசியக் கொடியை எரிக்க வேண்டும் என்ற தமது போராட்டத் திட்டத்தைப் பெரியார் அறிவித்தார்.

"இந்திய அரசாங்க தேசியக் கொடியைக் கொளுத்துவது என்பது மிகக் கடினமான தீர்மானம் என்பதாகக் கருதக் கூடும். இது இந்திய அரசாங்கத்தைக் கவிழ்க்கவோ ஒழித்துக் கட்டவோ கருத்துக் கொண்டு செய்யப்பட்ட கொடி கொளுத்தும் தீர்மானம் அல்ல."

"எங்களுக்கு - தமிழர்களுக்கு - தமிழ் நாட்டாருக்கு இந்திய அரசாங்கம் வேண்டாம்; தமிழ்நாடு - தமிழர்கள் இந்திய அரசாங்கத்தின் கூட்டு ஆட்சியில் - இந்திய யூனியனில் இருக்க விருப்பமில்லை. நாங்கள் எங்களை, நாட்டை, தனிப்பட்ட பூரண சுயேச்சையுள்ள தனியரசு நாடாக ஆக்க விரும்புகிறோம். எங்கள் நாட்டைத் தனி - பூரண சுயேச்சை நாடாக ஆட்சி செய்ய எங்களுக்குச் சக்தி உண்டு; மத்திய கூட்டாட்சியிலிருந்து பிரிந்து கொள்ள ஆசைப்படுகிறோம்."

"எங்களுடைய இந்த உணர்ச்சியையே அடியோடு அழிக்கும்படியான தன்மையில், அன்னிய மொழியாகிய இந்தி மொழியை எங்கள் நாட்டிற்குள் அரசியலின் பெயரால் பலாத்காரமாய்ப் புகுத்தி, மொழி, கலாச்சாரம், கல்வி முதலிய துறைகளிலும், அரசியல் ஆட்சி மொழி என்கிற தன்மையிலும் புகுத்தி இருப்பதோடு, இந்தி படித்து 'பாஸ்' செய்தவனுக்குத்தான் உத்தியோகம் என்கிற அளவுக்கு வடவராட்சி துணிந்து விட்டதால் இந்திய ஆட்சி தமிழ்நாட்டில் கூடாது என்கிற எண்ணம் எங்களுக்கு வலுப்பட்டு விட்டது.


ஆகவே, இந்திய தேசியக் கொடியைக் கொளுத்துவது இந்தியக் கூட்டாட்சி என்பதில் தமிழ்நாட்டுத் தமிழர்களாகிய நாங்கள் பிரஜைகளாக இருக்கச் சம்மதப்படவில்லை என்கிற எங்களுடைய இஷ்டமின்மையைக் காட்டுவதாகும்". (விடுதலை 20.7.1955) என்று, தம் தேதசியக் கொடி எரிப்புப் போராட்ட நோக்கத்தினை விளக்கினார்.

இதன் எதிரொலியாக அப்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சர் காமராசர் மத்திய - மாநில அரசுகள் சார்பாக இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று 30.7.55இல் பெரியாரிடம் ஓர் உறுதி மொழியைக் கொடுத்தார். இதை ஏற்றுக் கொண்ட பெரியார் தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தை ஒத்தி வைப்பதாக அறிவித்தார். இந்தப் போராட்ட அறிவிப்பின் விளைவாக, இந்தித் திணிப்பு இல்லை என்ற உறுதிமொழி அறிக்கை விடச் செய்ததுடன், இரயில் நிலையப் பெயர்ப் பலகையில் தமிழ் எழுத்துகளின் பெயரை மேலே பெரியதாக எழுதச் செய்து இந்தியைக் கீழே இறங்கும்படிச் செய்தார்.

இந்தக் கொடி எரிப்புப் பற்றிக் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், இந்திய தேசியக் கொடியை எரித்தால் அது எத்தகைய குற்றம், அதற்கு என்ன தண்டனை என்பதாகச் சட்டத்தில் எந்தக் குறிப்பும் இல்லை. வழக்கறிஞர்கள் எல்லாம் சட்டப் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தும், சட்டத்தில் இப்பேர்ப்பட்ட முக்கிய செய்தி பற்றி எதுவுமே இல்லை. இந்நிலையில், மத்திய அமைச்சர் திரு. கோவிந்த வல்லப பந்த் அவர்கள், "கொடி கொளுத்துவது பெரிய இராஜத் துரோகக் குற்றத்திற்குச் சமமான குற்றமாகும்" என்று கூறினார். மற்ற அரசியல்வாதிகளும் இப்போராட்டத்தைத் தேச விரோத - தேசத் துரோகக் குற்றம். இதனைச் சும்மா விடக் கூடாது. நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றெல்லாம் பேசினர்; எழுதினர்.

இது குறித்து பெரியார் 'விடுதலை'யில் ஒரு அறிக்கை வெளியிட்டார். நேருவுக்கும் காமராசருக்குமிடையே என்ன உரையாடல் நிகழ்ந்தது என்பதை விளக்கியது அந்த அறிக்கை. அந்த அறிக்கை:

"தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!



**முதலில் காமராசரைக் கண்டவுடனேயே நேரு புன்முறுவல் கொண்டு கிண்டல் செய்தாராம். நாயக்கரும், தாங்களும் கட்டிப் புரளுகிறீர்கள் என்று கூறுகிறார்கள். அவ்விதமிருக்க, உங்கள் ஆட்சியிலேயே நாயக்கர் ஏதேதோ செய்யப் போகிறாராமே? என்று கேட்டாராம்.அதற்கு முதன் மந்திரி அவர்கள் எல்லாம் உங்களால் வருவதுதான் என்றாராம்**

இந்தப் பார்ப்பனர்கள்தாம் இப்படிக் காலிகளைக் கிளப்பி விட்டனர் என்றால் மந்திரி கோவிந்த வல்லப பந்த் அவர்கள், கொடி கொளுத்துவது பெரிய இராஜத் துரோகக் குற்றத்திற்குச் சமமான குற்றமாகும் என்று கூறுகிறாராம். அதன் பிறகுதான் கொடிகொளுத்துவோர் பட்டியலில் ஆயிரக்கணக்கில் பெயர் வந்த வண்ணமிருக்கின்றது. அன்றியும் எந்தச் சட்டப்படி, என்ன குற்றம் என்பதே இதுவரை யாருக்கும் புலப்படவில்லை!

வக்கீல்கள் எல்லாம் சட்டப் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தும், இப்பேர்ப்பட்ட முக்கிய விசயத்தைப் பற்றிச் சட்டத்தில் ஒன்றுமே தென்படவில்லை. கொடியைக் கொளுத்தினால் என்ன தண்டனை விதிப்பது என்பதைப் பற்றி அரசாங்கமே இன்னமும் சட்டப்பூர்வமாக ஒன்றும் முடிவு செய்யவில்லை.

அப்படி இருக்க, தெருவில் திரியும் ஆண்டிகளெல்லாம், கொடியைக் கொளுத்தினால் உயிரைக் கொடுத்துக் காப்பேன் என்று மிரட்டுகின்றனர்.

இவர்கள் மிரட்டலுக்கும், பூச்சாண்டிகளுக்கும் நான் பயந்தவனா? அப்படித்தான் என் உயிர் போனாலும் நஷ்டம் என்ன என்று நினைப்பவன். நானும், இந்நாட்டில் ஒரு மனிதனின் சராசரி வயதைப்போல் மூன்று மடங்கு வயதுடையவன். இதுவரை இருந்தது போதாமல் இன்னமும் உயிருடன் இருக்க ஆசைப்படுபவன் அல்லன், போகிற நேரத்தில் ஏதாவது நல்ல காரியத்தைச் செய்துவிட்டுப் போகலாம் என்பதுதான் பெரிய கவலையே தவிர, என் உயிர் போய்விடுமே என்ற கவலை இல்லை.

நானும் இப்போராட்டம் நடந்தே தீரும் - அதன் மூலமாவது பெரிய குற்றமென்று சொல்கிறார்களே அதற்காகவாவது சில வருடங்கள் சிறைவாசம் செய்ய வாய்ப்புக் கிடைக்கும் என்று ஆவலோடு இருந்தேன். என் உடல்நிலையைப் பற்றிக்கூடக் கவனிக்காது உடல் நிலையில் பலவிதமான குறைகளிலிருந்தும் டாக்டரிடம் சரி செய்து கொள்ளாமல் இருந்து விட்டேன். ஏன்? **சொந்தச் செலவில் ஏன் காசை வீணாக்க வேண்டும்; சிறைக்குச் சென்றவுடன் அரசாங்கச் செலவிலாவது பார்த்துக் கொள்ளலாம் என்றெல்லாம் ஆசையுடன் இருந்தேன். ஆனால், தற்சமயம் அவ்வித வாய்ப்புக்கு இடமின்றிப் போய்விட்டது.**

நான் விரும்பியபடியே சர்க்கார் உறுதிமொழி கிட்டியது. என்னுடைய விருப்பப்படி சர்க்கார் எப்படிப்பட்ட வாக்குறுதி கொடுத்தால் போதும் என்றேனோ, அதன்படி வாக்குறுதி தந்துவிட்டது. இந்தி மொழி தமிழ்நாட்டார் மீது கட்டாயமாகத் திணிக்கப்பட மாட்டாது என்ற ஒரே உறுதிமொழி கொடுத்தால் போதும் என்றேன்.

இவ்வாக்குறுதியை அடைந்த பிறகு, நான் இக்கிளர்ச்சியை நடத்துவதென்பது சரியல்ல; ஆனால், அரசாங்கமும் இதுவரை அப்படித்தான் கூறி வந்திருக்கிறது. பெரிய தலைவர்களும், மந்திரிகளும்கூட இந்தியை விரும்பாதவர்களிடத்தில் கட்டாயப்படுத்துவதில்லை என்று கூறி வந்துள்ளார்கள். இன்றைக்கு நடைமுறையில் அப்படிக் காணவில்லை. பிரதமர் நேருவிடம் நிலைமையைத் தெளிவுபடுத்தினார் முதலமைச்சர் காமராசர்.

நேரு அவர்கள் கூட காமராசரிடம் அப்படித் தான் கூறினாராம். நாங்கள் எத்தனையோ முறை இந்தியைக் கட்டாயப் படுத்துவதில்லை என்று கூறியுள்ளோமே என்றாராம். முதலில் காமராசரைக் கண்டவுடனேயே நேரு புன்முறுவல் கொண்டு கிண்டல் செய்தாராம். நாயக்கரும், தாங்களும் கட்டிப் புரளுகிறீர்கள் என்று கூறுகிறார்கள். அவ்விதமிருக்க, உங்கள் ஆட்சியிலேயே நாயக்கர் ஏதேதோ செய்யப் போகிறாராமே? என்று கேட்டாராம்.அதற்கு முதன் மந்திரி அவர்கள் எல்லாம் உங்களால் வருவதுதான் என்றாராம். என்ன என்று கேட்டவுடன், இந்தியைக் கட்டாயப்படுத்துவதில்லை என்று பேசிவிட்டு, நடைமுறையில் கட்டாயப் படுத்தப்படுவதைப் பார்த்து ஆத்திரம் பொறுக்காமல் இதுபோன்ற கிளர்ச்சி எல்லாம் செய்கிறார்கள் என்றாராம். பிறகுதான், நம்மிடமா குற்றம் உள்ளது? அப்படி யானால் உடனே சென்று இனி கட்டாயப்படுத்தக் கூடாது என்பதாக அறிக்கை வெளியிடுங்கள் என்றாராம். அதன்படி தான் காமராசர் அவர்களும் அறிக்கை வெளியிடும்படியாகியது.

**அந்த அறிக்கையை வெளியிடுமுன் ஒரு சிலர் என்னிடம் கொண்டு வந்து காட்டி, இப்படி வெளியிட்டால் போதுமா என்று என் சம்மதம் கேட்டனர். நானும் அதைப் பார்த்து, ஒரு சில திருத்தங்களைச் சொல்லி, அதன்படி இருந்தால் போதுமென்றேன். அப்படியே திருத்தங்கள் செய்து அறிக்கையும் வெளியிடப்பட்டது.**

நானும், வெளியிட்ட எனது அறிக்கையை அவர்களிடம் காட்டவும், அவர்களும் போராட்டத்தை விட்டு விட்டதாகவே வெளியிடச் சொன்னார்கள். ஆனால், நான் அவ்வளவு ஏமாந்தனவனல்லன்! எனவே, நான் தங்கள் அறிக்கையை நடைமுறையில் பார்க்க வேண்டும்; அதுவரை போராட்டத்தைக் கைவிடுவதாக இல்லை; ஆனால், அதுவரை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளேன் என்பதாகக் கூறி, அதன்படியே போராட்டத்தை ஒத்தி வைத்துள்ளதாக இன்றைய அறிக்கையில் வெளியிட்டுள்ளேன்.

இவ்வுண்மைகளை நம் நாட்டுப் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்கின்றன. காமராசர் எச்சரிக்கை என்றும், நாயக்கரின் போராட்டம் வாபஸ் என்றும் எழுதுகின்றன. நாட்டின் நலனுக்கென்று உண்மைச் செய்திகளை வெளியிட வேண்டும் என்ற அறிவாளிகளைக் கொண்ட பத்திரிகைகள் ஒன்றாவது கிடையாது. எல்லாம் பார்ப்பான் நலனுக்கே - பார்ப்பானுடைய ஆதரவிலேயே - பார்ப்பனர்களாலேயே நடத்தப்படுவதால் பித்தலாட்டமும், பொய்யும், புளுகும், லம்பாடித்தனமுமாகவே நடந்து கொள்கின்றன.

இதனால் நம் நாட்டின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வழியின்றி போய்விடுகின்றது. இப்பத்திரிகைகள் அத்தனையும், நம் நாட்டை வடநாட்டவர்களுக்குக் காட்டிக் கொடுப்பவை களாகத்தாம் உள்ளன"- என்று பெரியார் அறிக்கை விடுத்தார்.

'விடுதலை' 3.8.1955

கொடி எரிப்புப் போராட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சியினர் கடுமையாக எதிர்த்தார்கள். குமரன் காப்பாற்றிய கொடி அல்லவா என்று கேட்டார்கள். குமரன் பிடித்தது காங்கிரஸ் கொடி; தேசியக் கொடி அல்ல; தேசியக் கொடியே அப்போது உருவாகவில்லை என்று பெரியார் பதிலளித்தார்.

"கொடியைப் பற்றிப் பிரமாதப்படுத்தியதும், அதை எரித்தால் உலகத்தையே சுட்டெரித்து விடுவதாக வீரப்பிரதாபம் பேசுவதும் வெறும் வீண் பேச்சே தவிர மற்றபடி கொடியை எரித்தால் இவர்களால் என்ன செய்துவிட முடியும்? செய்வதற்கு இவர்கள் கையில் என்ன சரக்கு இருக்கிறது? அரசியல் சட்டத்திலாகட்டும், கிரிமினல் பீனல் கோடிலாகட்டும், கொடிக்கு என்ன மரியாதை இருக்கிறது? அதை எரிப்பதற்கு என்ன தண்டனை இருக்கிறது? அதைச் சொல்லாமல் சும்மா, வீரப்பிரதாபம் பேசுவதில் பயன் என்ன?" என்று கேட்கிறார் பெரியார். (திருச்சியில் 8.10.1955இல் சொற்பொழிவின் ஒரு பகுதி. விடுதலை: 12.10.1955) பெரியாரின் இந்தக் கொடி எரிப்புப் போராட்டம் நாடு முழுவதும் ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY    TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/19-21  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM    REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## சங்கிகளின் கேள்விகளுக்கு நெத்தியடி பதில் (4)

# பூணூலும் கருஞ்சட்டையும் ஒன்று தானா?

ஒ. சுந்தரம்

*பெரியார் இயக்கத்தை நோக்கி சமூக வலைதளங்களில் பார்ப்பனிய நேரடி – மறைமுக ஆதரவு சக்திகள் முன் வைத்து வரும் கேள்விகளுக்கு நெத்தியடி பதில்.*

**கேள்வி : ‘ஹிந்துக்கள்’ தாலி அணிகிறார்கள். கிறிஸ்தவர்கள் திருமண மோதிரம் அணிகிறார்கள். முஸ்லிம்கள் பர்தா அணிகிறார்கள். ‘ஹிந்துக்கள்’ தாலி அறுக்கும் போராட்டம் நடத்திய நீங்கள், கிறிஸ்தர்கள் மோதிரம் கழற்றும் போராட்டமும், பர்தா கழற்றும் நிகழ்ச்சியும் நடத்தும் ஆண்மை இருக்கிறதா?**

பதில் : ‘தாலி’ அறுப்புப் போராட்டம் என தவறாகக் கூறுவது பற்றியும் ‘ஹிந்துக்கள்’ பற்றியும் ஏற்கெனவே விளக்கியாகிவிட்டது.

சிறுபான்மை கிறித்துவ மக்கள் மோதிரம் மாற்றி, திருமண பந்தத்தைக் காட்டுவது, ஒருவருக்கொருவர் மோதிரம் அணிவிப்பது போல், இந்துக்கள் என்பாரும் ஆணும் பெண்ணுமாகவா தாலி கட்டிக் கொள்கிறார்கள்? இல்லையே! பெண்ணுக்கு மட்டும்தானே தாலி?

கிறித்துவ சிறுபான்மை மக்களின், இஸ்லாமிய சிறுபான்மை மக்களின் பர்தா அணிதல் உட்பட்ட பழக்க வழக்கங்கள், அந்த மதக் குழுக்களின் அடையாளங்கள், அவற்றை மதித்து நடத்தலே பெரும்பான்மை மக்களின் ஜனநாயகப் பண்பாக இருக்க முடியும்.

ஆனால் பூணூல் அணிவது என்பது, எம் மக்களை ஆரியப் பார்ப்பனர் ‘சூத்திரர்’ என இழிவுபடுத்துவதும், தம்மை ‘பிராமணர்’ என உயர்த்திக் காட்டுவதுமான அடையாளம் அது போலவா கிறித்துவர் மோதிரம் அணிதலும், இஸ்லாமியர் பர்தா அணிவதும் அமைந்துள்ளது?

பர்தா அணிவது, பெண்ணடிமைக் குறியீடுதான்! அதற்கு இஸ்லாமியப் பெண்களிடமிருந்து நியாயமான எதிர்ப்புகள் வரவேண்டும்; வந்தால், நாங்கள் பெண்கள் பக்கமே நிற்போம். ‘முத்தலாக்’கை எதிர்த்து வழக்கு தொடர்ந்தவர்கள் இஸ்லாமியப் பெண்கள். நாங்கள் அவர்கள் பக்கமே நின்று, முத்தலாக்கில் நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றோம். ஆனால் இந்துப் பெண்கள் சபரிமலை கோயிலுக்குள் போகலாம் என்று இந்துப் பெண்கள் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நீங்கள் ஆதரித்தீர்களா? ஏன் எதிர்க்கிறீர்கள்? பதில் தேவை.

**கேள்வி : பார்ப்பனன், வைசியன், ஷத்திரியன், சூத்திரன் என்ற பிரிவு, அவரவர்களின் பிறப்புத் திறனைக் கொண்டு நெறியமைக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா? காவல் நிலையங்களில் அல்சேஷன் கூடாது, பொமரேனியன் வகை நாய்க் குட்டிகள்தான் காவலுக்கு வளர்க்க வேண்டும் என்று போராட்டம் நடத்தும் துணிவும், அறிவும் உங்களுக்கு உண்டா?**

பதில் : வர்ணாஸ்ரமத்தை நாய்களோடு ஒப்பிட்டதற்கு முதலில் நன்றி. நீங்கள் குறிப்பிடும் வர்ணப் பிரிவுகளில் பார்ப்பனர் என்று குறிப்பிடுவது சரியல்ல; ‘பிராமணர்’ எனக் குறிப்பிட வேண்டும்.

மனித நேயம் கொண்டவர்கள், மனித சமத்துவம் வேண்டும் எனப் போராடிய இராமானுஜர் உள்ளிட்ட ஆத்திகப் பெருமக்களும், பகுத்தறிவாளர்களும், நாத்திகர்களும் பிறப்பினால் எவரும் உயர்ந்தோரில்லை எனப் போராடி வரும் நிலையில், ஆரியப் பார்ப்பன உயர் வருணம் என்பது பிறப்பினால் வருவதே என ‘ஆரியக் கொழுப்பு’ தலைக்கேறி நீர் பிதற்றுவது கண்டு இந்த பேத நிலை அகற்றிட, மேலும் தீவிரமாகப் போராடிட வேண்டும் எனும் உறுதி எமக்குப் பிறக்கிறது.

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ எனும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க, சாதி பேதமற்று, இன இழிவு இல்லாது பெருவாழ்வு வாழ்ந்த மக்களிடையே ஆரியக் கூட்டம் பரப்பிய நால்வருணத்தைத் தூக்கிப் பிடித்து பெருமை கொண்டாடும் ‘அக்ரகாரக் கூட்டத்திற்கு’ அதன் அங்கமான ‘தொங்கு சதை’ப் பேர்வழிகளான உம் போன்றோருக்கு உரைக்கும் விதத்தில் இளைஞர் சமுதாயம் அறிவுச் சுடர் ஏந்தி, நால்வருணப் பிறப்பின் பெருமையை எரித்துச் சாம்பலாக்கும். அதுவரை ஆரிய - திராவிடப் போர் தொடரும்.

உமது வாதப்படி பிறப்புத் திறன் கொண்ட பிராமணனுக்கான கடமை என்ன தெரியுமா? வர்ண தர்மப்படி வேதம் ஓதுவது மட்டும் தான் அவன் கடமை. கடல் தாண்டிப் போகக் கூடாது. ஆனால் ‘பிராமணர்கள்’ வெளி நாட்டுக்கு ஓடுகிறார்கள். உயர் அதிகாரப் பதவிகளில் இருக்கிறார்கள். இப்படி ‘பிராமணர்களே’ வர்ணத்தை மீறுகிறார்களே! அதைத் தட்டிக் கேட்கும் துணிவும், அறிவும் உமக்கு உண்டா?

**கேள்வி: ‘பூணூல்’ என்பது ஒரு பகுதியினரின் அடையாளம். உங்களுக்குக் கருப்பு சட்டை போல! பூணூலை அறுக்கும் உங்கள் பகுத்தறிவு கருப்புச் சட்டை பற்றி ஒன்றும் உணர்த்தவில்லையா?**

பதில்: ‘பிராமணர்களின்’ ‘பூணூல்’ என்பது இந்நாட்டு மண்ணின் மைந்தர்களை, பெரும்பான்மை மக்களை ‘சூத்திரர்’ என அறிவித்து, இழிவுபடுத்தும் அடையாளமே தவிர, வெறுமனே ‘பிராமணர்’ என அடையாளம் காட்டுவதற்கு அல்ல என ஏற்கனவே இதுபற்றி விளக்கியாகிவிட்டது.

‘கருப்புச் சட்டை’ என்பது, நாங்கள் இழிவுபடுத்தப்பட்டிருக்கிறோம், சட்டத்தால், வருணத்தால், ஜாதிப் பிளவால் என்பதை ஒருவருக் கொருவர் உணர்த்தி, அந்த இழிவு நீங்கிட போராட வேண்டும் எனும் எழுச்சியை உருவாக்குவதற்கு அணியும் போர்வீரர்களின் சீருடை.

கருப்பு - காவிக்கு மறுப்பு! - இந்தத் துயரம், இழிவு நீங்கிட, இரத்தம் சிந்தியும் போராட வேண்டும் என்பதைக் குறிப்பதே, கருப்பின் அங்கம் கொண்டுள்ள சிவப்பு உணர்த்தும் பாடம்.

சமூக இருள், இன இழிவு நீங்கி, பெரும்பான்மையாய்ச் சூழ்ந்துள்ள கருப்பு எனும் கொடுமை அறவே நீக்கப்பட்டு, முழுவதும் சிவப்பாய் மாறி, எல்லோர்க்கும் எல்லாமும் கிடைத்திடும் பொது உரிமை - பொது உடைமைச் சமுதாயம் படைப்பதே எமது இலக்கு. அந்த நிலை வரும்போது எங்கள் கருப்புடைகள், புரட்சியின் வெற்றிச் சிவப்பாய் முழுவதும் மாறியே தீரும். அந்நேரம் பூமியில் எங்கும் பிராமண வருணபேதம், ஒழிக்கப்பட்டு மக்கள் சமத்துவ நிலையை அடைந்திருப்பர். அதுவரை இந்த இலக்கை அடையும் வரை பெரியாரியக்கம் போராடும்! வெற்றி பெறும்!

**கேள்வி : ஒன்றின் மீது நம்பிக்கை இருந்தால் அதைப் பின்பற்ற வேண்டும். இல்லையென்றால் பின்பற்ற வேண்டும் என்ற கட்டாய மில்லை. யாரும் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. அப்படியிருக்க பிராமணனையும், கடவுளையும் தூற்றி பொழப்பு நடத்துகிறீர்களே உங்களுக்கு வேறு வேலை வெட்டி கிடையாதா?**

பதில் : ‘அறிவுக் கொழுந்தாக’ இந்தக் கேள்வியை எழுப்பி உள்ள ‘ஆரிய சிசு’ உடனடியாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஓர் அங்கமாகவுள்ள ‘இந்து லா’ பகுதியைப் படித்துவிட்டு வர வேண்டும்.

இந்நாட்டுப் பெரும்பான்மை மக்கள், பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர வர்ணத்தார்களாகவும், இந்த வர்ண பேதங்களுக்குள் வராத - வரஇயலாத ‘அவர்ணஸ்தர்கள்’, ‘பஞ்சமர்’ என இழிவிலும் இழிவாக, நாங்கள் ஏற்க மறுத்தும் கட்டாயப்படுத்திக் கட்டிப் போடப்பட் டிருக்கிறோம்.

எனவேதான், தந்தை பெரியார் தலைமையில் ஜாதி இழிவைப் பாதுகாக்கும், பிராமண வருண பேதத்தைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவை தீ வைத்துக் கொளுத்தி பெரியார் தொண்டர்கள் சிறை பட்டு, வதைபட்டனர். எனவேதான், எங்கள் இன இழிவை ஒழிப் பதற்காகத்தான் ‘பிராமண’ உயர் ஆதிக்கக் கருத்தைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம்.

‘இந்த உலகம் முழுதும் கடவுளுக்கு கட்டுப்பட்டது. கடவுள் மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டவர். மந்திரங்கள் பிராமணர்களுக்குக் கட்டுப்பட்டது. எனவே பிராமணர்களே கடவுளாவர்’ என்று, தங்கள் உயர் ஆதிக்கத்திற்கு, எமது இன இழிவிற்கு நியாயம் கற்பிக்கத் துணிந்து மூட நம்பிக்கைகளைப் பரப்பியபோதுதான், பெரியாரின் அறிவியக்கம் அந்தக் கடவுளையே மறுத்து அறிவுப் போர் நடத்தியது. எனவே, வேலை வெட்டி இல்லாமல் இந்தப் போராட்டத்தில் நாம் இறங்கவில்லை. மனித குல சமத்துவத் திற்காகப் போராடவே இந்த வேலையில் இறங்கியுள்ளோம். வெற்றி பெறுவோம்!

சரி இருக்கட்டும்; கட்டாயப்படுத்துவது கூடாது என்று கூறும் உமக்கு ஒரு கேள்வி. இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஏதோ ஒரு ஜாதியின் அடையாளத்தோடு தான் இருந்தாக வேண்டும் என்று கட்டாயப் படுத்தியிருப்பது யார்? இந்துவாகப் பிறந்தவுடன் எந்த ஜாதிக்கும் மாறிக் கொள்ளலாம் என்று உங்களால் அறிவிக்க முடியுமா? அல்லது இந்துவுக்கு ஜாதி ஒரு கட்டாயமில்லை என்று கூற முடியுமா? பிறப்பின் அடிப்படையில் கூறு போடப்படும் ‘வர்ணாஸ்ரமத்தை’ பிறவித் திறன் என்று கூறிக் கொண்டு திரிவது நீர் தானே? பதில் வேண்டும்! ●

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்தில் அவரது துணைவியார் நாகம்மையார், சகோதரி கண்ணம்மாள் போராட்டக் காலங்களில் ஈடுபட்டு அடக்குமுறைகளை எதிர் கொண்டதை சுட்டிக் காட்டினார். மணியம்மையார் அவசர நிலை காலத்திலும் சட்ட எரிப்புப் போராட்ட காலத்திலும் துணிவுடன் செயல்பட்ட நிகழ்வுகளை சுட்டிக் காட்டி, ‘அச்சம் மறந்தவராக வாழ்ந்தார்’ என்று சுட்டிக் காட்டினார்.

நூற்றாண்டு விழா மேடையில் ஜாதி-சடங்கு மறுப்பு மண விழா நடந்தது. சிவகங்கை மாவட்டம் சங்கங்குளம் கிராமத்தைச் சார்ந்த பி. சேது- சே. ராஜாத்தி இணையரின் மகன் சே. தினேஷ் குமாருக்கும், தேனி மாவட்டம் பெரியகுளம் கணேசன்-ஜெயா இணையரின் மகள் க. நந்தினிக்கும் மணவிழாவை கழகத் தலைவர் கொளத்தூர் மணி உறுதி ஏற்பு கூறி நடத்தி வைத்தார். இது பிற்படுத்தப் பட்டோர் தாழ்த்தப்பட்டோருக்கு இடையே நிகழும் ஜாதி மறுப்பு திருமணம் என்று கொளத்தூர் மணி அறிவித்தபோது பலத்த கரவொலி எழுந்தது.

எளிமையை வாழ்க்கையாக்கிக் கொண்ட ஜாதி ஒழிப்புப் போராளி அன்னை மணியம்மையார் நூற்றாண்டு விழா மேடையில் நடந்த இந்த எளிமை - ஜாதி மறுப்பு மணவிழா, நூற்றாண்டு விழாவுக்கு பெருமையையும் சிறப்பை யும் சேர்த்தது. அனைவருக்கும் மாட்டுக் கறியுடன் இரவு உணவு வழங்கப்பட்டது. ஏராளமான பொது மக்களும் கழகத்தினரும் விழாவில் பங்கேற்றனர்.

வடசென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் நடத்திய விழாவுக்கு உடனிருந்து பணியாற்றி அனைத்துப் பணிகளிலும் துணை நின்ற தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதிக்கு வடசென்னை மாவட்டக் கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நினைவுப் பரிசும் கருப்புடையும் போர்த்தி சிறப்பு செய்தார். சங்கீதா நன்றியுரையுடன் விழா நிறைவடைந்தது. ●

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted: 14th March 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN